# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## பொதுத்தேர்வு
## 2025
## வளர்தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

TEDC-FR

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
4 AV DES PRIMEVERES
77290 MITRY MORY
WWW.tamiledc.com

TEDC -FR
TEDC -FR

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

TEDC-FR


TEDC -FR

TEDC -FR
TEDC -FR

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. உயிர் நெட்டெழுத்துகள்

அ ) 5 ☐ ஆ ) 6 ☐

இ ) 7 ☐ ஈ ) 4 ☐

2. மழையில் நனைந்தபடி பாரி மகளிர் வீட்டுக்கு வந்த புலவர்

அ ) இளங்கோவடிகள் ☐ ஆ ) ஔவையார் ☐

இ ) தொல்காப்பியர் ☐ ஈ ) சோமசுந்தரப் புலவர் ☐

3. சிபிச்சக்கரவர்த்தி, மனுநீதி கண்டசோழன் ஆகியோருக்கு நிகராகக் குறிப்பிடப்படும் மன்னன்

அ ) சங்கிலியன் ☐ ஆ ) எல்லாளன் ☐

இ ) சேனன் ☐ ஈ ) குத்திகன் ☐

4. எழுச்சி என்பதன் எதிர்ச்சொல்

அ ) மகிழ்ச்சி ☐ ஆ ) புகழ்ச்சி ☐

இ ) வீழ்ச்சி ☐ ஈ ) இகழ்ச்சி ☐

5. சினைப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) நூலகம் ☐ ஆ ) அன்பு ☐

இ ) ஓடுதல் ☐ ஈ ) பூ ☐

6. கல்யாணி என்ற இடத்தின் இன்றைய பெயர்

அ ) யாழ்ப்பாணம் ☐ ஆ ) நாகதீபம் ☐

இ ) கொழும்பு ☐ ஈ ) பூநகரி ☐

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

7. தைப்பொங்கல் அன்று மேலோங்கி நிற்கும் தமிழர் பண்பாடு

அ ) சினம் ☐ ஆ ) வீரம் ☐

இ ) விருந்தோம்பல் ☐ ஈ ) மானம் ☐

8. படர்க்கை இடத்தைக் குறிக்கும் சொல்

அ ) வரைந்தாய் ☐ ஆ ) வரைந்தீர்கள் ☐

இ ) வரைந்தான் ☐ ஈ ) வரைந்தேன் ☐

9. 'பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும் ....' என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ ) மூதுரை ☐ ஆ ) நல்வழி ☐

இ ) ஆத்திசூடி ☐ ஈ ) நாலடியார் ☐

10. தமிழ் + இசை என்பதைச் சேர்த்து எழுதினால்

அ ) தமிழ்இசை ☐ ஆ ) தமிழிஇசை ☐

இ ) தமிழிசை ☐ ஈ ) தமிழ்ழிசை ☐

11. பாரி மகளிரைக் காப்பாற்றிய புலவர்

அ ) பாரதியார் ☐ ஆ ) கபிலர் ☐

இ ) பாவேந்தர் ☐ ஈ ) திருவள்ளுவர் ☐

12. நாங்கள் இனிய பாடலைப் பாடினோம். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள செயப்படுபொருள்

அ ) நாங்கள் ☐ ஆ ) பாடினோம் ☐

இ ) இனிய ☐ ஈ ) பாடலை ☐

TEDC-FR



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

13. கோவில் மணி ____________ என ஒலித்தது.

அ ) பளபள ☐ ஆ ) கணீர்கணீர் ☐

இ ) கலகல ☐ ஈ ) கலீர்கலீர் ☐

14. இலங்கையில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் இறுதிவரை நிலைத்து நின்ற அரசு

அ ) யாழ்ப்பாணத் தமிழரசு ☐ ஆ ) கோட்டையரசு ☐

இ ) கண்டியரசு ☐ ஈ ) சிங்கள அரசு ☐

15. உண்டாள் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ ) ட் ☐ ஆ ) ஆள் ☐

இ ) உண் ☐ ஈ ) ண் ☐

16. மான உணர்வும் ஊக்கமும் கொண்ட விலங்கு

அ ) பூனை ☐ ஆ ) யானை ☐

இ ) எலி ☐ ஈ ) புலி ☐

17. இறந்தகாலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) இருந்தான் ☐ ஆ ) இருக்கிறான் ☐

இ ) இருப்பான் ☐ ஈ ) இரு ☐

18. ஆமையுடன் குளத்தில் வாழ்ந்து வந்தவை

அ ) வாத்துகள் ☐ ஆ ) அன்னங்கள் ☐

இ ) கொக்குகள் ☐ ஈ ) காகங்கள் ☐

TEDC-FR


TEDC -FR

TEDC -FR TEDC -FR

19. ஒருமை, பன்மை என்பன

அ ) இடம் ☐ ஆ ) காலம் ☐
இ ) திணை ☐ ஈ ) எண் ☐

20. ____________ சொல்லாலும் செயலாலும் வெளிப்படும்.

அ ) நாகரிகம் ☐ ஆ ) பண்பாடு ☐
இ ) உயர்வு ☐ ஈ ) நட்பு ☐

21. கன்னியாவில் காணப்படும் வெந்நீர்க் கிணறுகளின் எண்ணிக்கை

அ ) ஆறு ☐ ஆ ) மூன்று ☐
இ ) ஐந்து ☐ ஈ ) ஏழு ☐

22. ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு

அ ) 1970 ☐ ஆ ) 1983 ☐
இ ) 1972 ☐ ஈ ) 1951 ☐

23. அட்டாலும் ____________ சுவையில் குன்றாது.

அ ) நீர் ☐ ஆ ) பால் ☐
இ ) தேநீர் ☐ ஈ ) சங்கு ☐

24. தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களுக்கு 'கவிமணி' என்ற பட்டத்தை வழங்கியவர்

அ ) வேலுப்பிள்ளை ☐ ஆ ) கணபதிப்பிள்ளை ☐
இ ) உமாமகேசுவரன்பிள்ளை ☐ ஈ ) ஆறுமுகம்பிள்ளை ☐

25. நீ, நீர், நீங்கள் என்பன

அ ) முன்னிலை ☐ ஆ ) படர்க்கை ☐
இ ) தன்மை ☐ ஈ ) ஒருமை ☐

TEDC-FR

புள்ளிகள் 25



TEDC -FR

TEDC -FR TEDC -FR

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஈழத்தில் அமைந்துள்ள இடங்களில் ஒன்று மட்டக்களப்பு. இது கிழக்கு மகாணத்தில் அமைந்துள்ளது. மட்டக்களப்பின் கரையோரம் எங்கும் களப்புகள் மிகுந்து காணப்படும். களப்பு என்பது ஆழமற்ற கடல்நீர் ஏரியாகும். இக்களப்புகளில் மட்டு இறால்கள் பெருமளவு கிடைக்கின்றன. இவை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இக் களப்புகளில் ஒன்றிலே முழுமதி நாளில் இனிய மெல்லிசை ஒன்று கேட்கும். இவ்வொலியை மீன் பாடுவதாக மக்கள் கருதுகின்றனர். இவ் இசையினால் மட்டக்களப்பு 'மீன்பாடும்வாவி' எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றது.

1. ஈழத்தில் அமைந்துள்ள இடங்களில் ஒன்று எது?

______________________________

2. மட்டக்களப்பின் கரையோரம் எங்கும் எவை மிகுந்து காணப்படும்?

______________________________

______________________________

3. களப்பு என்றால் என்ன?

______________________________

4. களப்புகளில் எவை பெருமளவு கிடைக்கின்றன?

______________________________

5. எது 'மீன்பாடும்வாவி' எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றது?

TEDC-FR
______________________________

புள்ளிகள் 10



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. பாரி மகளிரின் பெயர்களைத் தருக.

___

2. இலங்கைக்கு முதலில் வந்த ஐரோப்பியர் யார்?

___

3. தாயகத்தில் இயற்கைத்துறைமுகம் எங்கே அமைந்துள்ளது?

___

4. யாழ்ப்பாண அரசு எந்த வணிகத்தில் சிறந்து விளங்கியது?

___

5. நாட்டுப்புறப் பாடல்கள் யாரால் பாடப்படும்?

___

6. சொற்பொருள் தருக.

விழுப்பம் ___

வறுமை ___

7. 'மறப்பேனா' என்ற பாடத்தில் தன் தாயைவிட இனியது எதுவெனக் கவிஞர் காசிஆனந்தன் கூறுகின்றார்?

___

TEDC-FR

புள்ளிகள் 10



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி; கவிதையை முழுமையாக்குக.**

## வானவில்

| | | | | |
|---|---|---|---|---|
| வெய்யிலும் | அழகாய் | முடியுமா | பாடி | ஏழு |

வானில் தோன்றும் வானவில்
வண்ணம் ____________ கொண்டதே
பாதி வட்டம் போன்றதே
பார்க்க ____________ இருக்குமே

மழையும் ____________ சேரும்போதே
மெல்ல வானில் தோன்றுமே
பார்த்துக் களிப்போம் நாங்களே
பாடிப் ____________ மகிழ்வோமே

தொட்டுப் பார்க்க ஆசையே
அருகே போக ____________
நீண்ட நேரம் நில்லாமல்
ஏனோ அழிந்து போகுதே!

TEDC-FR

புள்ளிகள் 10


TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

நிலவன் வீட்டில் ஒரு மீன்தொட்டி இருந்தது. அந்த மீன்தொட்டியில் வண்ணவண்ண மீன்கள் நீந்திக்கொண்டிருந்தன. அவை சிவப்பு, நீலம், மஞ்சள் போன்ற நிறங்களில் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. நிலவன் ஒவ்வொருநாளும் மாலை வேளையில் மீன்களுக்கு உணவு போடுவான். பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்ததும் அவன் மீன்களைப் பார்த்து மகிழ்வான்.

1. உயர்திணைச்சொல் ஒன்று தருக.

______________________________

2. பலவின்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

3. இடப்பெயர் ஒன்று எழுதுக.

______________________________

4. மகிழ்வான் என்ற சொல் குறிக்கும் காலம் எது?

______________________________

5. குணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

6. நிலவன் வீட்டில் ஒரு மீன்தொட்டி இருந்தது. இதில் வந்துள்ள எழுவாயைத் தருக.

______________________________

புள்ளிகள் 12

**ஆ)** திணை, பால், இடம் என்பனவற்றைத் தருக.

| | திணை | பால் | இடம் |
|---|---|---|---|
| மரங்கள் | | | |

TEDC-FR

புள்ளிகள் 03


TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மழை | பனி | தோல் | மலை | தோள் | பணி |

1. நண்பனுக்குத் துன்பம் வந்தால் ____________ கொடுத்து உதவ வேண்டும்.
2. ____________ யில் நீர்வீழ்ச்சி உருவாகின்றது.
3. வாழைப்பழத் ____________ மஞ்சள் நிறமுடையது.
4. சிறுவர்கள் ____________ யில் சறுக்கி விளையாடினர்.
5. ____________ பெய்தால் மரங்கள் செழித்து வளரும்.

புள்ளிகள் 05

TEDC-FR


TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**7) தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பொருத்தமாக இணைக்குக.**

| | | | |
|---|---|---|---|
| கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் | ● | ● | பஞ்சுமெத்தை. |
| கொடுத்தார்க்குக் | ● | ● | இறகு போடாது. |
| துணிந்தவனுக்குத் தூக்குமேடை | ● | ● | அம்மியும் நகரும். |
| மயிலே மயிலே என்றால் | ● | ● | சிறப்பு. |
| அடிமேல் அடி அடித்தால் | ● | ● | குறைவில்லை. |

புள்ளிகள் 05

**8) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.**

1. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்த

   முள்ளத் தனைய ________________

   ( அயர்வு, துயர்வு, வாழ்வு )

2. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்

   பெற்றத்தாற் ________________ பயன்

   ( கற்ற, அற்ற, பெற்ற )

TEDC-FR

புள்ளிகள் 05


TEDC -FR

TEDC -FR TEDC -FR

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ மாமன்னன் எல்லாளன்
- ✸ நாட்டுப்புறப்பாடல்கள்
- ✸ பனிகாலம்
- ✸ எனது நண்பன் / நண்பி

புள்ளிகள் 15

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

TEDC-FR



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

TEDC-FR



TEDC -FR

TEDC -FR
TEDC -FR
TEDC-FR



TEDC -FR